## 1.1 மறுப்பு அபிப்பிராயம்

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் நிதிக்கூற்றுகள் தொடர்பில் நான் அபிப்பிராயமொன்றினை வழங்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கத்தை செலுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளின் ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலமும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான தெளிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீடு தொடர்பான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தவதன் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. போதியளவு நிச்சியமற்ற நிலைமைகள் உள்ளதாக நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும்.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதுக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்களை முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள, புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கப்பூர்வமாக செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய போதுமான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கப்பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தவா என்பதும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 | | |
| (i) நியமத்தின் 95(இ) பந்தியின் பிரகாரம், உரிய மூலதனத்தினுள் காணப்படுகின்ற ஒவ்வொரு ஒதுக்கத்தின் தன்மை மற்றும் நோக்கம் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தவேண்டியிருப்பினும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான ரூபா 2.28 மில்லியன் ஆன மூலதன ஒதுக்கம் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது என, 2002 ஆம் ஆண்டினுள் மோட்டார் வாகனமொன்று மீள் மதிப்பீடு செய்யப்பட்டதன் ஊடாக உருவாகிய ஒதுக்கமாக காணப்பட்ட போதிலும் அந்த மோட்டார் வாகனம் விற்பனையின் போது ஒதுக்கம் நீக்கப்படுவதற்கு | இந்த வழு நிவர்த்தி செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மற்றும் 2020 ஆம் ஆண்டில் ஒதுக்கீட்டு புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| (ii) | நியமத்தின் 132 ஆம் பந்தியின் பிரகாரம், நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டுக் அடிப்படைகள் வெளிப்படுத்த வேண்டியிருப்பினும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான ரூபா 734.48 மில்லியன் நடைமுறையிலுள்ள மூலதன வேலைகளின் மதிப்பீட்டு அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொதுவாக நடைமுறையிலுள்ள மூலதன வேலையின் திரண்ட கிரயம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும் என. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், நடைமுறையிலுள்ள மூலதன வேலைகளின் மதிப்பீட்டு அடிப்படை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இந்த வழு நிவர்த்தி செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணத்தினால் கிரயம் ரூபா 2,505.61 ஆன நிலையான சொத்து முற்றாக தேய்மானமாகியிருந்த போதிலும் இன்னும் பயன்பாட்டில் காணப்பட்டன. அதன் பிரகாரம், ஏற்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என, இந்த சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்வதற்கு பெரும் செலவு ஏற்கப்பட்டு தொழில்சார் நிறுவனத்தின் உதவி பெற்றுக்கொள்ளல் வேண்டுமென மற்றும் இது தொடர்பாக விலைமதிப்புத் திணைக்களத்தின் உதவி பெறப்பட்டு அவர்களுக்கு மதிப்பீடு செய்யக்கூடிய சொத்து வகைகள் மீள்மதிப்பீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இந்த வழு நிவர்த்தி செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 10 இன் 39(அ) ஆம் பந்தியின் பிரகாரம், சேவை வழங்குவதற்குரிய கொடுக்கல் வாங்கல்களின் கூடுதல் கட்டணம் அடையாளப்படுத்தப்படுவதற்காக பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்த வேண்டியிருப்பினும், | இந்த அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது என, வைத்தியசாலையினால் வழங்கப்படுகின்ற அனைத்து வகையான சேவைகளுக்காகவும் தற்போது அறவிடப்படுகின்ற அநேக கட்டணங்கள் அந்தந்த காலங்களில் | வைத்தியசாலை கட்டணம் கணக்கிடப்படுவதற்காக குறித்த கொள்கையொன்று பின்பற்றப்படல் வேண்டியதுடன் அந்த கொள்கை |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ரூபா 2,765.65 மில்லியன் ஆன வைத்தியசாலைக் கட்டணம் (Hospital Charges) கணக்கிடப்படுவதற்காக பின்பற்றப்பட்ட கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய வைத்திய நிபுணர்களினால் பரிந்துரை செய்யப்பட்ட கட்டணமாவதுடன் காலத்திற்கு காலம் செயற்படுத்தப்பட்ட விலை குழுக்களின் ஊடாகவும் சில விலைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என, சரியாக செயற்படுத்தப்படுகின்ற நிலையான விலைக் கொள்கையொன்று செயற்படுத்தடவில்லை என, மொத்த கிரயத்தினை அடிப்படையாகக் கொண்டு மிக சரியான விலை கொள்கையொன்று நிறுவுவதற்காக பணிப்பாளர் சபையினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என மற்றும் பொது பணி போன்ற மறைமுக செலவுகள் அடையாளப்படுத்துவதற்கு காணப்படுகின்ற நடைமுறை சிரமங்களினால் இந்த விலைக் கொள்கை அடையாளப்படுத்தல் தாமதயாகியது என. | நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட ல் வேண்டும். இந்த வழு நிவர்த்தி செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான அட்டுறு செலவு ரூபா 5.69 மில்லியன் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. மேலும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான அட்டுறு தொழிற்செலவு ரூபா 11.93 மில்லியன் மற்றும் அட்டுறு உலர் உணவுச் செலவு ரூபா 4.84 மில்லியன் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. அக் காரணத்தினால் வருடத்தின் நட்டம் ரூபா 22.46 மில்லியனால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது என மற்றும் 2020 ஆம் ஆண்டில் சரியாக கணக்கிடப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | ஆண்டுடன் தொடர்புடைய அனைத்து செலவுகளும், அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்படல் வேண்டும். இந்த வழு நிவர்த்தி செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் 3 கட்டுமான ஒப்பந்தங்களில் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 10.89 மில்லியன் வருவானமாக கணக்கிடப்படுவதற்கு பதிலாக நடைமுறை பொறுப்பாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றதுடன் 2020 ஆம் ஆண்டில் சரியாக கணக்கிடப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | இந்த வழு நிவர்த்தி செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான வைத்தியசாலை | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது என, வைத்தியசாலைக் கட்டணங்கள் | கணினி கணக்கீட்டு அமைப்பில் |

| | | | |
|---|---|---|---|
| | கட்டண கட்டுப்பாட்டு கணக்கில் காணப்பட்ட ரூபா 15.61 மில்லியன் வரவு மீதிக்கு காரணங்கள் அடையாளப்படுத்தப்பட்டு தேவையயான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியமைக்கு பதிலாக அந்த மீதி விடுதிக் கட்டணங்கள் வருமானக் கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. அக் காரணத்தினால் ஆண்டின் நட்டம் அப் பெறுமதியினால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | கட்டுப்பாட்டு கணக்கிற்கு உள்ளிட்ட விடயங்கள் சரியான நேரத்தில் இணக்கம் செய்வதற்கு முடியாமையும், systolic தகவல் அமைப்பிலிருந்து Accpac கணக்கீட்டு அமைப்பிற்கு தரவுகள் மாற்றப்படும் போது ஏற்படுகின்ற நடைமுறை பிரச்சனைகளும், நோயாளர்களின் பணத்தில் கடன் அட்டையினூடாக அல்லது கடன் ஆவணங்களினூடாக அறவிடப்படுகின்ற மொத்த கட்டணங்களில் வைத்தியசாலை கட்டணங்கள் வருமானம் மற்றும் தொழிற்சார் கட்டணங்கள் எவ்வளவு என்று வேறுபடுத்துவதற்கு உள்ள நடைமுறை சிரமங்கள் அக் கணக்கில் ரூபா 15.61 மில்லியன் வரவு மீதியொன்று ஏற்படுவதற்கு காரணமாகியுள்ளது என, தொடர்புடைய கணக்கு மாதாந்தம் இணக்கம் செய்தல் மிகவும் சிக்கலான செயன்முறையாக உள்ளமை மற்றும் இரண்டு அமைப்பிலும் பொறியியலாளர்களுடன் கலந்துரையாடி இரண்டு அமைப்புக்களும் மேம்படுத்தப்பட்டு இணக்கம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | காணப்படுகின்ற குறைப்பாடுகள் திருத்தப்படுவதற்கும், அமைப்பிற்கு தரவுகள் உட்செலுத்தும் போது, தரவுகள் மாற்றம் செய்யும் போதும் தரவுகள் அழிக்கப்படும் போது மேற்கொள்ளப்பட வேண்டிய முறையான நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பு தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இந்த வழு நிவர்த்தி செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | தொழில்சார் கட்டணங்கள் அறவிடல் மற்றும் கொடுப்பணவு முறையாக கணக்கிடல் முறைமையொன்று அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான தொழில்சார் கட்டணங்கள் கணக்கில் காணப்பட்ட ரூபா 81.75 மில்லியன் வரவு மீதிக்கு காரணங்கள் அடையாளப்படுத்தப்பட்டு தேவையான சீராக்கல்கள் செய்வதற்கு பதிலாக அம் மீதி வைத்திசாலை கட்டணங்கள் கட்டுப்பாட்டு கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. அக் காரணத்தினால் ஆண்டின் நட்டம் அப் பெறுமதியில் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது என, ஆதியிலிருந்து காணப்பட்ட கணக்கீட்டு வழக்கத்தின் பிரகாரம் தொழில்சார் கட்டணங்கள் அறவிடல் மற்றும் மீள் செலுத்தல் தொடர்பாக வேறாக கணக்கிடல் முறைமையொன்று காணப்படவில்லை என, மாதாந்தம் கணக்கு மீதிகள் இணக்கம் செய்வதன் ஊடாக தொடர்புடைய சிராக்கல்கள் மேற்கொள்வதற்காக கணக்கீடு அமைப்பினுள் மற்றும் Systolic தகவல் அமைப்பினுள் தேவையான நடவடிக்கைகள் சரியாக மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | வைத்தியசாலை கட்டணங்களினுள் அடங்கும் தொழில்சார் கட்டணங்கள் குறிப்பாக அடையாளப்படுத்தப்பட்டு கணக்கிடப்படக்கூடிய முறைமையொன்று கணினி கணக்கீட்டு அமைப்பினுள் நிறுவப்படல் வேண்டியதுடன், பணம் அல்லது கடன் ஊடாக மேவுகை செய்யப்பட்டுள்ள தொழில்சார் கட்டணங்கள் வெவ்வேறாக அடையாளப்படுத்தக் கூடிய வகையில் Systolic அமைப்பிற்கு தரவுகள் உள்ளடக்கும் முறையான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். மேலும், |

| | | | |
|---|---|---|---|
| | | | மாதாந்தம் மீதிகள் இணக்கப்படுவதன் ஊடாக தொடர்புடைய கணக்குகளில் சீராக்கல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்த வழு நிவர்த்தி செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும். |
| (உ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான வைத்தியசாலைக் கட்டணங்கள் கடன்பட்டோர் கணக்கில் காணப்பட்ட ரூபா 23.80 மில்லியன் செலவு மீதிகளுக்கு மற்றும் வர்த்தக கடன்பட்டோர் கணக்கில் காணப்பட்ட ரூபா 17.36 மில்லியன் ஆன வரவு மீதிகளுக்கு காரணங்கள் அடையாளப்படுத்தப்பட்டு தேவயையான இணக்கங்கள் மேற்கொள்வதற்கு பதிலாக அக் கணக்குகளில் எதிர் ஒத்த மீதிகளுக்கு எதிர் ஈடுசெய்யப்பட்டிருந்தது. | கணக்கீட்டு மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்ட முதற் காலப்பகுதிகளில் கடன் பட்டோரின் பணம் பெறப்படல் சரியாக தொடர்புடைய BHT இலக்கங்களுக்கு மாற்றப்படாமையினால் இது நடந்துள்ளது என, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான கடன்பட்டோரின் செலவு மீதிகளுக்கு காரணங்கள் அடையாளப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என, கணக்கீட்டு மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்ப ஆண்டுகளில் கடன்பட்டோருக்கு கொடுப்பனவு காசுப் புத்தகத்தினுள் சரியாக குறிப்பிடப்பட்டிருப்பினும், தனிப்பட்ட கடன்பட்டோர் கணக்குகளில் சரியாக குறிப்பிடப்படாமை கடன்பட்டோர் கணக்கில் வரவு மீதி காணப்படுவதற்கு காரணமாகியுள்ளது என மற்றும் தற்போது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பிரதியெடுக்கும் வழு அமைப்பினுள் சரிசெய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | கடன்பட்டோரிடமிருந்து பணம் பெறல் மற்றும் கடன் உரிமையாளர்களுக்கு பணம் செலுத்தல் சரியாக அமைப்பினுள் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கடன்பட்டோர் மற்றும் கடனீந்தோர் மீதிகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இந்த வழு நிவர்த்தி செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | சபையினால் பேணிச் செல்லப்படுகின்ற Dialysis Assistant நிதியத்திற்கு சொந்தமான ரூபா 12.5 மில்லியன் ஆன நிலையான வைப்பு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிராததுடன் அதற்கு பதிலாக அப் பெறுமதி Dialysis Assistant நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது என மற்றும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஆண்டிற்கு தொடர்புடைய அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் சரியாக அடையாளப்படுத்தப்படு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என மற்றும் இந்த வழு நிவர்த்தி செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட 5 உத்தியோகத்தர்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1.28 மில்லியன் பங்கு ஊதிய ஒதுக்கம் நடைமுறை பொறுப்பின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கையில், அதற்கு சமனான பெறுமதியில் 2019 திசெம்பர் 31 இல் பங்கு ஊதியம் ஒதுக்கம் அதிகரிக்கப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான பங்கு ஊதிய ஒதுக்கத்திற்காக தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றில் இந்த உத்தியோகத்தர்களினது ஊதிய பணம் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் இந்த தவறு ஏற்பட்டுள்ளது என மற்றும் அது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இந்த வழு நிவர்த்தி செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | 2016 இல் விற்கப்பட்டிருந்த போதிலும் விற்பனை பெறுமதி அடையாளப்படுத்த முடியாதிருந்த மற்றும் 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் முறையாக ரூபா 4.39 மில்லியன் க்கு மற்றும் ரூபா 638,100 க்கு விற்கப்பட்டிருந்த மருத்துவ உபகரணங்கள், மின் உயர்த்தி, மின் உற்பத்திகள், கட்டிட பொருட்கள்,மரப்பொருள் உபகரணங்கள் சக்கர நாற்காலிகள் மற்றும் ஏனைய உபகரணங்களின் கிரயம் மற்றும் திரண்ட தேய்மானம் கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது என, எனினும், அகற்றப்பட்ட உறுப்படிகளின் கிரயம் மற்றும் திரண்ட தேய்மான பெறுமதி வெவ்வேறாக அடையாளம் காணப்படுவதற்கான சிரமத்தினால் விற்பனையினால் பெறப்பட்ட இலாபம் கணக்கீட்டு இலாபமாக அடையாளப்படுத்தப்பட்டது என. | அகற்றப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இந்த வழு நிவர்த்தி செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும். |
| (ஐ) | 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் உடைத்து அகற்றப்பட்ட 2 கட்டிடங்களின் கிரயம் ரூபா 3.63 மில்லியன் மற்றும் திரண்ட தேய்மானம் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிராததுடன் கடந்த ஆண்டிற்காக முறையாக ரூபா 72,599 வீதம் தேய்மானம் செய்யப்பட்டிருந்தது. | வைத்தியசாலை ஆரம்பத்தில் இந்த கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது என, சில கட்டிடங்களின் கிரயம் ஒன்றாக கணக்கிடப்பட்டமையினால் வெவ்வேறாக கிரயம் அடையாளம் காண்பதற்கு கடினமானது என, தேய்மானம் செய்யப்பட்டிருந்த பெறுமானம் கணக்குகளில் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அகற்றப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இந்த வழு நிவர்த்தி செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும். |
| (ஒ) | கடந்த ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த வீட்டு வாடகை வைப்பு ரூபா 240,000 செலவொன்றாக கணக்கிடப்பட்டமையின் தவறு மீளாய்வாண்டில் திருத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆண்டின் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இந்த வழு நிவர்த்தி செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | 2019 திசெம்பர் 31 இல் காலாவதியாகிய மருந்துகளின் கிரயம் ரூபா 972,570 ஆக மற்றும் காலாவதியாகிய திணிப் பொருட்கள், அறுவைசிகிச்சை பொருட்கள், ஆய்வுக்கூட பொருட்கள் மற்றும் கதிர்வீச்சு பொருட்களின் கிரயம் ரூபா 5.25 மில்லியன் ஆக கணக்கிடப்பட்டிருப்பினும், அத்திகதிக்கு பௌதீக இருப்பு ஆய்வு அறிக்கையின் பிரகாரம் அக் கிரயம் முறையாக ரூபா 814,083 மற்றும் ரூபா 6.61 மில்லியன் ஆகியதனால் வேறுபாடு முறையாக ரூபா 158,487 மற்றும் ரூபா 1.36 மில்லியன் ஆக காணப்பட்டது. | சில இருப்பு உறுப்படிகள் காலாவதியாயிருப்பினும், எதிலின் ஒக்ஸைட் முறையின் ஊடாக அவை இன்னுமாக பயன்படுத்தக்கூடிய நிலைமையில் காணப்படுகின்றமையினால் இருப்பு பரீட்சிப்பின் போது அவை காலாவதியானதென கருத்திற் கொள்ளப்படாமை மற்றும் தொடர்புடைய திகதியை அடிப்படையாகக் கொண்டு காலாவதியாகிய இருப்பு உறுப்படிகள் அவ்வாறே கணக்கிடப்பட்டுள்ளது என. | காலாவதியாகிய இருப்புக்களின் கிரயம் சரியாக அடையாளப்படுத்தப்பட வேண்டியதுடன், காலதியானது என அடையாளப்படுத்தப்படு வதற்கான முறையான முறைமை இருப்பு பரீட்சிப்பு செயன்முறையினுள் வண்ணமே கணக்கீட்டு அமைப்பினுள்ளும் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். வித்தியாசத்திற்கான காரணம் அடையாளப்படுத்தப்பட்டு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டினுள் கடன்பட்டோர் நான்கு நபர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த மொத்த பணம் ரூபா 2.80 மில்லியன் மற்றும் பணிநிலையினரினுள் கடன்பட்டோரின் சம்பளங்களிலிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 635,788 கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டியதற்கு பதிலாக வைத்தியசாலை கட்டுப்பாட்டு கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது என, 2020 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மற்றும் இது தொடர்பாக மென்பொருள் பொறியியலாளரிடம் இன்னும் ஆலோசனைகள் பெற்றுக் கொண்டு தொடர்புடைய அமைப்பு திருத்தப்படும் என. | கணக்கீட்டு அமைப்பில் தொடர்புடைய மேம்பாடுகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் கடன்பட்டோரிடமிருந்து அறவிடப்பட்ட பணம் சரியாக கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இந்த வழு நிவர்த்தி செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஃ) | மீளாய்வாண்டினுள் பணிநிலை அங்கத்தவரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வைத்தியசாலை கட்டணம் ரூபா 223,245 கணக்கிடப்படாததுடன் 2019 திசெம்பர் 31 திகதி வரையிலும் அப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்பட்டது என, பணிநிலையின் அங்கத்தரொருவரை சார்ந்தவரான இந்த நோயாளர் அவசர சிகிச்சை பிரிவில் மரணித்துள்ளார். தொடர்புடைய நிலுவைப் பணம் விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் மற்றும் தொடர்புடைய திருத்தங்கள் 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் என. | அறவிடப்பட வேண்டிய வைத்தியசாலைக் கட்டணம் விரைவாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், தவறு திருத்தப்பட்டு 2020 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும். |
| (க) | 2019 திசெம்பர் 31 இல் காணப்பட்ட 5.41 மில்லியன் கடன்பட்டோரிடமிருந்து பணம் அறவிடப்படுவதற்கு இயலாமை அடையாளப்படுத்தப்பட்ட போதிலும், அதற்கான சேத பெறுமதிக்காக ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அடமான கடனிற்காக ஏற்பாடு மேற்கொள்ளப்படவில்லையென ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என மற்றும் வருங்காலத்தில் அடமான கடன் ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடன்பட்டோர் சரியாக அடையாளப்படுத்திக் கொள்வதற்கும் அதன் பிரகாரம் தொடர்புடைய நிதிஏற்பாடுகள் நிதிக் கூற்றுக்களில் ஒதுக்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து முன்வைக்கப்படல் வேண்டும். |
| (ச) | 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து சனாதிபதி நிதியத்திலிருந்து பெறவேண்டியவை என ரூபா 16.27 மில்லியன் நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருப்பினும், இது தொடர்பாக சனாதிபதி நிதியத்திலிருந்து தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு தொடர்படைய கணக்குகளில் சீராக்குவதற்கு மற்றும் சனாதிபதி நிதியத்திலிருந்து இந்த மீதி உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது என, மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்ட முதற் காலகட்டத்தில் சனாதிபதி நிதியத்திற்கு சொந்தமான பற்றுச்சீட்டுகள் சரியாக நோயாளர் கட்டில் குறிப்பு இலக்கங்களுக்கு கணக்கிடப்பட்டு தீர்க்கப்படவில்லை என. தொடர்புடைய இணக்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு பழைய கடன்பட்டோர் மீதிகள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சனாதிபதி நிதியத்தினால் இந்த மீதி உறுதி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். தொடர்புடைய இணக்க நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு தொடர்படைய கட்டில் குறிப்பு இலக்கங்களிற்கு சரியாக கணக்கிடப்பட்டு பழைய கடன்பட்டோர் மீதி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| | விடயம் | நிதிக் கூற்றுகளின் பிரகாரம் பெறுமதி | கணக்கீட்டு பதிவேட்டின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | |
| (அ) | 2019 திசெம்பர் 31 உள்ளவாரான வர்த்தக கடன் வழங்குனர்கள் | 577.13 | 584.96 | 7.83 | அவதானிப்புடன் இணங்கப்படுகினறது என. 2016 ஆம் ஆண்டில் அக்பெக் (Accpac) கணக்கீட்டு மென்பொருள் அறிமுகப்படுத்தும் போது கடன்வழங்குனர் கட்டுப்பாட்டு கணக்கிற்கு உள்ளடக்கப்பட்ட மொத்த கடன்வழங்குனர் மீதி மற்றும் தனிப்பட்ட கடன்வழங்குனர் கணக்குகளுக்கு உள்ளடக்கப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை வேறுபடல் மற்றும் மேலதிகமாக, இது வரையில் ஏற்பட்டுள்ள இடுகையிடும் தவறுகளினால் (Posting errors) இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது என, 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முன்னர் சரியான வர்த்தக கடன் வழங்குனர் மீதி அடையாளப்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டிலிருந்து கடன் வழங்குனர் கணக்குகளின் அனைத்து குறிப்புகளும் மீண்டும் பரிசோதிக்கப்பட்டு | Accpac கணக்கீட்டு அமைப்பில் காணப்படுகின்ற தவறுகளை இனங்கண்டு திருத்துவதற்கும், தனிப்பட்ட கடன்வழங்குனர் மீதி பட்டியல் நிதிக் கூற்றுக்களில் கடன் வழங்குனர் மீதிகளுடன் இணக்கப்படுகின்ற விதத்தில் பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | சரியான மீதி அடையாளப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான வைத்தியசாலை கட்டண கடன்பட்டோர் | 216.42 | 248.51 | 32.09 | கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | Accpac கணக்கீட்டு அமைப்பில் காணப்படுகின்ற தவறுகளை இனங்கண்டு திருத்துவதற்கும், தனிப்பட்ட கடன்பட்டோர் மீதி பட்டியல் நிதிக் கூற்றுக்களில் கடன்பட்டோர் மீதிகளுடன் இணக்கப்படுகின்ற விதத்தில் பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான வைத்தியசாலைக் கட்டண வைப்பு | 8.52 | 8.55 | 0.03 | Systolic அமைப்பின் மூலம் பெறப்படுகின்ற அறிக்கையினூடாக இந்த வைப்பு சேர்க்கை பெற்றுக் கொள்ளப்பட்டமை என மற்றும் வேறுபாடு ஏற்படுவதற்கு காரணம் தேடிப்பார்க்கப்படும் என. | வைத்தியசாலை கட்டண வைப்பு மீதி மற்றும் வைப்பு பதிவேட்டின் பிரகாரம் மீதிகளின் இடையிலான வேறுபாடு தேடி பார்க்கப்பட்டு தொடர்படைய சீராக்கல்கள் மேற்கொள்ளல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் முன்வைக்கப்படாமை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | | | |
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான வர்த்தக கட்டணங்களில் அறவிடப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட வரி | 16.57 | லெஜர் கணக்கு | தொடர்புடைய அட்டவணைகள்/ லெஜர் கணக்கு முன்வைக்கப்படல் முடியும் என. | இரட்டை பதிவு முறையின் கீழ் கொடுக்கல் வாங்கல்கள் சரியாக குறிப்பிடப்படல் வேண்டியதுடன் தொடர்புடைய |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | லெஜர் கணக்கு மற்றும் அட்டவணைகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நானாவித வைப்புக்கள் | 4.34 | 21 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய நானாவித வைப்பு மீதிகளின் துல்லியத்தன்மை உறுதி செய்யக்கூடிய பதிவேடுகள் | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது என, 1984 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் வைப்பு செய்யப்பட்டிருந்த வெவ்வேறு வகையான 42 வைப்புக்களின் நிறுவனம், நபர்கள் மற்றும் ஏனைய பற்றுச்சீட்டுக்களின் மூலப்பிரதிகளையும் கண்டுபிடிக்க முடியவில்லை என மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தொடர்புடைய வைப்பினை கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு 2020 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | இது தொடர்பாக தகவல்கள் கண்டுப்பிடிப்பதற்கு சாத்தியமான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டியதுடன் வைப்பு பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | சேவைக் கட்டணம் | 0.63 | வர்த்தக கட்டணங்களில் 0.15 சதவீதம் மட்டும் வைத்தியசாலை சேவைக் கட்டணமாக அறவிடப்படுவதற்கு தொடர்புடைய பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது என, தொழிற் கட்டணங்களில் 0.15 சதவீதம் வைத்தியசாலை கட்டணமாக அறவிடப்படுவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகார கடிதம் கண்டுபிடிக்க முடியவில்லை என. | தொழிற் கட்டணங்களில் வைத்தியசாலைக் சேவைக் கட்டணமாக அறவிடப்படும் சதவீதம் மீண்டும் மீளாய்வு செய்வதற்கு மற்றும் அதற்காக முறையான அங்கீகாரம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான வைத்தியசாலக் கட்டண கட்னபட்டோர் மற்றும் வர்த்தக கடன் வழங்குனர் | 216.42<br>577.13 | நிலுவைக் காலவரையறை முறையாக அடையாளப்படுத்தப்படும் வகையில் தயாரிக்கப்பட்ட கடன்பட்டோர் மற்றும் கடன் வழங்குனர் கால பகுப்பாய்வு | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது என, நிலுவை காலவரையறை முறையாக அடையாளப்படுத்தப்படும் வகையில் கால பகுப்பாய்வு தயாரிக்கப்படுவதற்கு AccPac கணக்கீட்டு அமைப்பினுள் வசதிகள் இல்லாமையினால் அதற்காக மென்பொருள் | நிலுவை காலவரையறை முறையாக அடையாளப்படுத்தப்படும் வகையில் கடன்பட்டோர் மற்றும் கடன் வழங்குனர் கால பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பொறியியலாளரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக் கூற்றுக்களுடன் முன்வைக்கப்படல் வேண்டும். |
| (உ) | தொழிற் கட்டணங்கள் அறவிடல் மற்றும் கொடுப்பனவு செய்தல் | 289.25<br>374.54 | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யப்பட்ட தொழில்சார் கட்டணங்கள் தொடர்பாக பேணிச் செல்லப்படும் லெஜர் கணக்கு | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது என, தொழில்சார் கட்டண பணத்தில் அறவிடல்கள் தற்போது சரியாக கணக்கிடப்படாததுடன் அது வைத்தியசாலை கட்டணங்கள் கட்டுப்பாட்டு கணக்கிற்கு செலவு வைக்கப்படல் தவறு என, தொழிற் கட்டணங்கள் அறவிடல் மற்றும் கொடுப்பனவு செய்தல் சரியாக கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யப்பட்ட தொழிற் கட்டணங்களுக்காக லெஜர் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களில் அப் பெறுமதி வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஊ) | Dialysis Assistance fund இடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணம். | 1.68 | பிண்ணினைப்பு | Dialysis Assistance Fund இடமிருந்து 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து வைத்தியசாலையினால் அறவிடப்பட வேண்டிய இந்த பணம் பெறப்பட்டுள்ளது என மற்றும் கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இந்த மீதி ஏற்பட்ட விதம் மற்றும் காட்டப்படுகின்ற பிண்ணினைப்பு கணக்காய்விற்கு முன்வைக்கப்படல் வேண்டும். |
| (எ) | ஒசுசல கட்டணம் விடுதலை ஔடத வருமானம் | 36.56 | வைத்தியசாலை பணிநிலையினருக்காக கட்டணங்கள் விடுதலை பற்றுச்சீட்டு செலவு மற்றும் ஒசுசல கட்டணங்கள் விடுதலை ஔடத வருமானத்திற்கிடையில் ரூபா 9.21 மில்லியன் வேறுபாடு இணக்கப்படுவதற்கு தேவையான பிண்ணினைப்புக்கள் மற்றும் அறிக்கைகள் | இந்த அவதானிப்புடன் இணங்கப்படுகினறது என மற்றும் இதற்கு தொடர்புடைய இணக்க நடவடிக்கைகளுக்காக வைத்தியசாலை கணினி முறைமை மேம்படுத்தப்படல் வேண்டும் என. | இந்த பிண்ணினைப்பு மற்றும் அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய விதத்தில் கணினி முறைமை மேம்படுத்தப்பட்டு தேவையான இணக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் இணக்க கூற்றுக்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சுகாதார கல்வி பல்கலைகழக கல்லூரி நடத்துவதற்காக 2017,2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்காக பெறப்பட வேண்டிய ரூபா 8.93 மில்லியன் சுகாதார, போசாக்கு மற்றும் உள்நாட்டு வைத்திய அமைச்சிடமிருநந்து பெறப்படுவதற்கு 2019 திசெம்பர் 31 திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பணம் சுகாதார அமைச்சிடமிருந்து அறவிடப்பட முடியுமா என தேடிப் பார்க்கப்படும் என மற்றும் அறவிடல்கள் தொர்பாக எழுத்துமூல அங்கீகாரம் கண்டுபிடிக்க முடியவில்லை என. | பணம் மீள்நிரப்பப்படுவதற்கு அல்லது எழுத்துமூல அங்கீகாரமில்லாது செயற்பட்ட பொறுப்பு கூறவேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக கூடுதல் கட்டணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான 7 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 5.31 மில்லியன் ஆன நானாவித கடன்பட்டோர் (Sundry Creditors) மீதிகள் 14, ரூபா 800,907 தொகையான செயலாற்றுகை பிணை முறியின் வைப்புக்களின் (Performance Bond Deposit) 7 மீதிகள், ரூபா 437,799 ஆன செலுத்தப்பட வேண்டிய மீதிகள் மற்றும் ரூபா 3.61 மில்லியன் ஆன தொழில்சார் கட்டணங்கள் தீர்பணவு செய்வதற்கு அல்லது வருமானமாக இனங்கண்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீர் வழங்கல் சபைக்கு செலுத்தப்பட வேண்டிய பணம் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்டதெனின் மற்றும் அப் பணம் கேட்டப்படாததனால் கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என, வெவ்வேறு நிறுவனங்களினால் அவர்களின் நோயாளர்களுக்காக வைப்பு செய்யப்பட்டுள்ள ரூபா 155,100 கணக்ககளிலிருந்து நீக்கப்பட முடியாது என, நிறுத்தி வைக்கப்பட்ட பணம் வருங்காலத்தில் கொடுப்பனவு செய்யவதற்கு நேரிடும் என, செலுத்தப்பட வேண்டிய தொழில்சார் கட்டணம் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாயினும் தொழில்சார் கட்டணங்கள் செலுத்தப்படும் போது ஏற்பட்ட சிரமங்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்வதற்கு இந்த ஆவணங்கள் பரிசோதனை குழுவினால் எடுத்து செல்லப்பட்டுள்ளது என, ஏனைய நானாவித கடன்பட்டோர் மீதி மற்றும் செயலாற்றுகை பிணை முறியின் வைப்புக்கள் தொடர்பாக தேடி அறியப்பட்டு கணக்குகளிலிருந்து நீக்கப்படுவதற்கு அல்லது இணக்கம் | செலுத்தப்பட வேண்டிய பணம் வருமானமாக இனங்கண்டு கொள்வதற்கு மற்றும் கணக்கிடப்படுவதற்கு முன்னர் கடன்பட்டோர் மற்றும் நிறுவனங்களிடமிருந்து விசாரனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் விசாரனைக்கு பின்னர் கிடைக்கப்பெறுகின்ற பதிலின் அடிப்படையில் தீர்க்கப்படுவதற்கு அல்லது வருமானமாக இனங்கண்டு கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மற்றும் எஞ்சிய பணம் 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகளாவதனால் கணக்குகளிலிருந்து நீக்கப்படும் என.

## 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) அமப/1984/335(2) இலக்கமுடைய அமைச்சரவையின் குறிப்பானைக்கு 1984 யூலை 11 ஆம் திகதி பெறப்பட்டிருந்த அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் 2010 யூன் 28 ஆம் திகதிய 08/2010 இலக்கமுடைய உள்ளக சுற்றறிக்கை | வைத்திய நிபுணர்கள் சாதாரண கடமை நேரத்தினை தவிர்த்து மேற்கொள்ளப்படுகின்ற நோயாளர் சிகிச்சை சேவைகளுக்காக மட்டும் தொழில்சார் கட்டணங்கள் அறவிடப்படவேண்டியதுடன், சாதாரண கடமை நேரத்தினுள் மேற்கொள்ளப்பட்டுள்ள நோயாளர் சிகிச்சை சேவைக்காக தொழில்சார் கட்டணங்கள் அறவிடப்பட்டிருப்பின் அத் தொழில்சார் கட்டணங்கள் வைத்தியசாலை வருமானத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும். எனினும், வைத்தியரர்கள் மற்றும் ஏனைய பணிநிலையினர் சாதாரண கடமை நேரத்தினுள் தனிப்பட்ட வெளி நோயாளர்கள் சிகிச்சை சேவையில் ஈடுபட்டு மீளாய்வாண்டினுள் ரூபா 2.229 மில்லியன் ஆன தொழில்சார் கட்டணங்கள் ஈட்டப்பட்டிருப்பினும் அது வைத்தியசாலை வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | நோயாளர்களின் சிக்கல்கள் காரணத்தினால் சாதாரண கடமை நேரத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த அறுவை சிகிச்சை சாதாரண கடமை நேரம் வரையில் நீழும் சந்தர்ப்பங்கள் உள்ளது என மற்றும் இது தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு தெரியப்படுத்தி தொடர்புடைய சட்டத் திட்டங்கள் இன்னுமாக முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சாதாரண கடமை நேரத்தினை தவிர்த்து மேற்கொள்ளப்படுகின்ற நோயாளர்கள் சிகிச்கை சேவைக்காக மட்டும் தொழில்சார் கட்டணங்கள் செலுத்தப்படாமை உறுதி செய்யப்படக்கூடிய குறித்த முறைமையொன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். சாதாரண கடமை நேரத்தினுள் மேற்கொள்ளப்பட்டுள்ள நோயாளர் சிகிச்சை சேவைக்காக அறவிடப்பட்டுள்ள தொழில்சார் கட்டணங்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் வைத்தியசாலை வருமானத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும். |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | II ஆம் அதிகாரத்தின் 2.1 ஆம் உறுப்புரை மற்றும் 2.2 தொடக்கம் 2.6 வரையான உறுப்புரைகள் | பணிநிலையின் அனைத்து சேவையினதும் மற்றும் அனைத்து வகுப்பினதும் பதவிகளுக்காக தேவையான தகுதிகள், பதவிக்கான சம்பள அளவு, வயது எல்லை மற்றும் தொடர்புடைய ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்பட்டு இணைத்தல் ஒழுங்குவிதி தயாரிக்கப்படல் வேண்டியதுடன், தாபனக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறை பின்பற்றப்பட்டு அவ் ஒழுங்குவிதிக்காக தொடர்புடைய அங்கீகாரம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருப்பினும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இணைத்தலுக்கான ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது என, 06/2006 இலக்கமுடைய பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் பணிநிலயையினருக்காக இணைத்தல் ஒழுங்குவிதியொன்று தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு 2012 செப்தெம்பர் 18 ஆம் திகதி முன்வைக்கப்பட்டுள்ளது என மற்றும் அனைத்து பதிகளுக்காகவும் தேவையான இணைத்தல் ஒழுங்குவிதி தயாரிக்கப்பட்டு தேவையான இணைத்தல், உயர்த்தல், இடமாற்றல், ஒழுக்காறு கட்டுப்பாடு மேற்கொள்ளல் அனைத்திற்காகவும் அதற்கு தொடர்புடைய மிக அறிவுடைய உத்தியோகத்தரொருவருக்கு ஒப்புக் கொடுப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது என. | வைத்தியசாலை பணிநிலையினருக்காக இணைத்தல் மற்றும் உயர்த்தல் ஒழுங்குவிதி தயாரிப்பதற்கும், இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையில் காட்டப்பட்டுள்ள அலோசனையின் பிரகாரம் செயற்பட்டு அதற்கான அங்கீகாரம் பெற்றுக் கொளளப்படுவதற்கும் விரைவாக செயற்படல் வேண்டும். பணிநிலையின் நிர்வாகம் தொடர்பாக முகாமைத்துவத்தின் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டியதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பாக அவ்வவ்போது விசாரித்தல் வேண்டும். |
| (ii) | II ஆம் அதிகாரத்தின் 1.2 மற்றும் 1.3 ஆம் உறுப்புரை | நியமித்தல் அல்லது உயர்த்தல் மேற்கொள்ளப்பட முடிவது அங்கீகரிக்கப்பட்ட பணிநிலையினரின் பதவிக்கு மட்டுமாவதுடன் புதிய பதவிகள் உருவாக்கல் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் மேற் கொள்ளப்பட வேண்டியிருப்பினும், அவ் அங்கீகாரம் பெறப்படாமல் கடந்த ஆண்டில் 2 புதிய பதவிகள் உருவாக்கப்பட்டு பணிநிலைக்காக 8 நபர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது என. | திறைச்சேரியின் அங்கீகாரம் பெறப்படாமல் உருவாக்கப்பட்ட பதவிகள் இரத்து செய்யப்படுவதற்கு அல்லது அப் பதவிகளுக்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 1.4 மற்றும் 1.6 ஆம் உறுப்புரைகள் | பதவியொன்றின் உத்தியோகப்பூர்வ நாமம் மாற்றப்படுவதற்கு நிறுவன பணிப்பாளரினதும் திறைச்சேரியினதம் அங்கீகாரம் பெறவேண்டியிருப்பினும், அவ் அங்கீகாரம் பெறப்பாடாமல் 13 முகாமைத்துவ மட்ட உத்தியோகப்பூர்வ நாமங்கள் மாற்றப்பட்டிருந்தது. அவ் 2 பதவிகளுக்காக உத்தியோகப்பூர்வ நாமங்கள் புதிய இணைத்தல் மேற்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்படாத சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் புதிய நிர்வாக அமைப்பின் மீது புதிய நிர்வாக பதவிகள் உருவாக்கலின் நோக்கத்தின் அடிப்படையில் முகாமையாளர்களின் பதவிநிலைகள் மாற்றப்படுவதற்கு பணிப்பாளர் சபை தீர்மாணித்துள்ளது என மற்றும் 2019 மார்ச் 28 ஆம் திகதி கூடப்பட்ட பணிப்பாளர் சபையினாள் 2019 யூன் 24 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் மீண்டும் முன்னர் இருந்த பதவி நாமங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது என. | பதிவியொன்றின் உத்தியேகப்பூர்வ நாமம் மாற்றப்படுவதற்கு தேவையாயின் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிப்பதற்கு நடைமுறையில் கடினமாயினும் அதிகமாக தகவல்கள் உள்ளடக்கி பதிவேடொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதனை இன்னும் முன்னேற்றும் பொருட்டு தேவையான நடவடிக்கைகள் வகுக்கப்படும் என. | நிலையான சொத்துக்களுடன் தொடர்புடைய அனைத்து தகவல்களையும் அவதானிக்கக்கூடிய வகையில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2001 யூலை 02 ஆந் திகதிய 02-72/2001 இலக்க சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பொது சுற்றறிக்கை கடிதம். | ஆய்வுக்கூட ஓடர்லி (Orderly) ஊழியர்கள் சாதாரண கடமை நேரத்தின் பின்னர் மேற்கொள்கின்ற பரிசோதனைகளுக்காக துண்டு (பீஸ் ரேட்) அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் போது ஆயத்தப்படுத்துகின்ற மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பினும் அம் | ஆய்வுக்கூட ஊழியர்களினால் சாதாரண கடமை நேரத்தினை தவிர்த்து மேற்கொள்ளப்பட்ட அனைத்து பரிசோதனைகளுக்காக மாதிரி மற்றும் பரிசோதனை போன்ற சொற்கள் இரண்டினதும் கருத்து ஒன்றாக எண்ணப்பட்டு கொடுப்பனவு | தொடர்புடைய சுற்றறிக்கையின் ஊடாக இடமளிக்கப்பட்டுள்ள மாதிரிகளுக்காக மட்டும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் இரவு நேரத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மாதிரிகள் தொடர்பான மாதாந்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாதிரிகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் எண்ணிக்கையின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்குள் 15 ஆய்வுக்கூட ஊழியர்களுக்காக சுற்றறிக்கைக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்த கொடுப்பனவுகளின் மொத்த கூட்டுத்தொகை ரூபா 954,380 ஆக காணப்பட்டது. | மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் என மற்றும் தற்போது ஆய்வுக்கூட ஊழியர்களின் விண்ணப்பத்தின் பிரகாரம் முகாமைத்துவ குழுவின் ஊடாக எடுக்கப்படுகினற தீர்மானங்களின் பிரகாரம் அவர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்படுகின்றது என. | அறிக்கையொன்று தொடர்புடைய வவுசர் உடன் முன்வைக்கப்படல் வேண்டும். மிகை கொடுப்பனவுகள் மீண்டும் அறவிடப்படல் வேண்டும். |
| (ஊ) | 2006 மே 10 ஆம் திகதிய Q 2 - 84/2006 இலக்க சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் பொது சுற்றறிக்கை கடிதம் | குருதியியல் பிரிவின் நடைமுறை சேவையின் போது சேர்க்கப்படுகின்ற குருதி மாதிரிகள் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்த 25,944 பரிசோதனைகளுக்காக 7 ஆய்வுக்கூட தொழிலாளர்களுக்கு ரூபா 583,740 தொகை துண்டு (பீஸ் ரேட்) முறையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருப்பினும், அப் பரிசோதனைகள் சாதாரண கடமை நேரத்தினை தவிர்த்து இரவு நேரங்களில் றே்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய பரிசோதனைகளாக உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. | புதிய பரிசோதனை வகைகள் புதிதாக அறிமுகப்படுத்துவதனால் சாதாரண கடமை நேரத்தினை தவிர்த்து மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு பரிட்சிப்பிற்க்கும் ரூபா 22.50 வீதம் கோர முடிவதுடன் மற்றும் கொடுப்பனவு கோரப்படுகின்ற வவுசர் அந்தந்த பிரிவுகளின் வைத்திய நிபுணர் மற்றும் ஆய்வுக்கூடத்தின் பிரதான வைத்திய நிபுணர் கையொப்பமிட்டு துல்லியத்தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது என. | சாதாரண கடமை நேரத்தினை தவிர்த்து இரவு நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய பரிசோதனை என உறுதி செய்யப்பட்டதன் பின்னர் மட்டும் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (எ) | 2016 ஒக்தோம்பர் 10 ஆம் திகதிய DMS/1758-Vol.1 இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம். | அங்கீகரிக்கப்பட்ட பணி நிலையினர் மறுகட்டமைப்பு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு தேசிய சம்பளம் மற்றும் பணியாளர்கள் ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் ஆணைக்கழுவின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருப்பினும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது என, வைத்தியசாலையின் அனைத்து பதிவிகளுக்காகவும் இணைத்தல் ஒழுங்குவிதி தயாரிக்கப்பட்டு தேவையான இணைத்தல், உயர்த்தல்,இடமாற்றம் மற்றும் ஒழுக்காறு கட்டுப்பாடுகளுக்காக அது தொடர்பான | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஆலோசனைகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பணிநிலையினர் மறுகட்டமைப்பு செய்வதற்கு தொடர்புடைய திட்டம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டு அங்கீகாரம் |

| | | |
|---|---|---|
| | மிகவும் புரிதல் கொண்ட உத்தியோகத்தரொருவருக்கு ஒப்பு கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள என, வருங்காலத்தில் இந்த தவறுகள் அனைத்தும் திருத்தப்படுவதற்கு முடியும் எனவும், இந்த இணைத்தலுகக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளவுகள்

மீளாய்வாண்டின் செயயற்பாட்டு விளைவு ரூபா 108.27 மில்லியன் ஆன நட்டத்தினை விளைவித்திருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 117.08 மில்லியன் ஆகவிருந்தது. அதன் பிரகாரம், நிதிசார் விளைவுகளில் ரூபா 225.35 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான செலவீனம் ரூபா 750.35 மில்லியன் ஆல் அதிகரித்திருந்த போதிலும் வருமானம் ரூபா 524.99 மில்லியன் ஆல் மட்டுமே அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் வைத்தியசாலைக் கட்டண வருமானமாக ரூபா 2,766 மில்லியன் அடையாளப்படுத்தப்பட்டிருப்பினும், அவ் வைத்தியசாலைக் கட்டணம் கணக்கிடப்படுவதற்கு தொடர்புடைய கிரயம் அடையாளப்படுத்தப்படல், இலாப சதவீதம் தீர்மானித்தல், கட்டணங்கள் விடுவித்தல், கட்டணங்கள் திருத்தியமைத்தல் தொடர்பான அதிகாரம் மட்டங்கள் தீர்மானிக்கப்படல் | வைத்தியசாலையினால் வழங்கப்படுகின்ற அனைத்து விதமான சேவைகளுக்காகவும் தற்போது அறவிடப்படுகின்ற அநேக கட்டணங்கள் அவ் அவ் காலங்களில் தொடர்புடைய வைத்திய நிபுணரினால் பரிந்துரை செய்யப்படுகின்ற கட்டண அமைப்பாவதுடன் நேரத்திற்கு நேரம் அமுல்படுத்தியிருந்த விலைக் குழுவின் ஊடாகவும் சில விலைகள் பரிந்துரை செய்யப்பட்டு உள்ளதுடன் சரியாக செயற்படுத்தப்பட்டுள்ள நிலையான விலைக் | வெ்வேறு பரிசோதனைகள், அறுவை சிகிச்சை மற்றும் நோயாளர்களுக்காக வைத்தியசாலையினால் வழங்கப்படுகின்ற ஏனைய சேவைகள் தொடர்பான கட்டணங்கள் தீர்மானிப்பதற்காக விலைக் குழுவொன்று நியமிக்கப்படல் வேண்டும். விலைக்குழுவினால் தீர்மானிக்கப்படுகின்ற கட்டணம் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் வருமானம் கணக்கிடப்படுவதற்கு பயன்படுத்தப்படுகின்ற கணினி அமைப்பில் காணப்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டு முழுமையான வருமானம் கூட்டப்படுவதன் சதவீதமொன்று தயாரிப்பதற்கு வைத்தியசாலை சபை செயற்பட்டிருக்கவில்லை. இக் காரணத்தினால் வைத்தியசாலை கட்டண கணக்கிற்கு மீளாய்வாண்டினை போன்றே கடந்த ஆண்டில் வெவ்வேறு இணக்கங்கள் அதிகாரம் இல்லாமல் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் இது தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கொள்கையொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை என. பொது பணிகள் போன்ற மறைமுக செலவுகள் அடையாளப்படுத்தப்படுவதற்கு காணப்படும் சிரமங்களினால் இவ் விலைக் கொள்கை அறிமுகப்படுத்தப்படுவதற்கு தாமதமாகியுள்ளது என மற்றும் மொத்த கிரயத்தினை அடிப்படையாகக் கொண்டு மிகச் சரியான விலைக் கொள்கையொன்று ஸ்தாபிப்பதற்கு நிறுவனத்தின் பணிப்பாளர் சபையால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது என. | கட்டணங்கள் திருத்தியமைத்தலுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். மொத்த கிரயம் மேவுகை செய்யப்படும் விதத்தில் விலைகள் தீர்மானிக்கும் கொள்கையொன்று அடையாளப்படுத்தப்பட்டு கணினி அமைப்பிற்கு உள்ளடக்கப்பட்டு செயற்படுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்காக தேவையான தரவுகள் மற்றும் அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் Systolic கணினி அமைப்பினுள் மாற்றுவதற்கு காணப்படும் வசதிகள் பூட்டப்பட்டிருக்கவில்லை. | மாதாந்த Accpac அமைப்பு பூட்டப்பட்டிருத்தல் நடைமுறையில் சிரமானதுடன் இறுதி கணக்குகள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் அமைப்பு மாற்றுவதன் வசதிகள் பூட்டப்பட்டுள்ளது என. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்காக தேவையான தரவுகள் மற்றும் அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் Systolic அமைப்பினுள் மாற்றல் செய்வதற்காக காணப்படும் வசதிகள் பூட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சுகாதார அமைச்சினால் அனுப்பப்பட்ட நோயாளர்களுக்கு மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த இருதய அறுவை சிகிச்சைகளுக்காக அமைச்சினால் மீள்பெறப்பட வேண்டிய பணம் ரூபா 94.381 மில்லியன் ஆக காணப்பட்டது. எனினும், அந் நோயாளர்களின் அறுவைசிகிச்கை, ஆய்வுக்கூட பரிசோதனைகள் மற்றும் தங்கும் காலவரையறை தீர்மானித்தலும், மேற்கொள்ளப்பட வேண்டிய ஏனைய பரிசோதனைகளுக்கான கட்டணங்கள் அறவிடப்பட வேண்டிய விதம் தொடர்பாகவும், இரு தரப்பினரதும் கவனம் செலுத்தப்பாடதுடன், எந்தவொரு முன் ஒப்புதலும் இல்லாமல் சுகாதார அமைச்சினால் அனுப்பப்பட்டிருந்த நோயாளர்களின் அறுவைசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2011 ஆம் ஆண்டிலிருந்து இருதய அறுவை சிகிச்சைக்காக அமைச்சினால் மீளளிக்கப்பட வேண்டிய பணம் தொடர்பாக இரு தரப்பினரும் இணங்கப்பட்டதன் பின்னர் உடன்பாட்டிற்கு தற்போது வந்துள்ளது என, எவ்வாறாயினும், சமீபத்தில் நடைப்பெற்ற சுகாதார அமைச்சின் கணக்காய்வு குழுவின் போது கலந்துரையாடப்பட்ட பிரகாரம் இதற்காக அமைச்சுக்கு வேறு செலவு விடயமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டு தொடர்புடைய மீளளிப்பு மிகவும் முறையாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | சுகாதார அமைச்சின் ஊடாக வேறு அரச வைத்தியசாலைகளில் இந்த வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகின்ற நோயாளர்களின் அறுவைசிகிச்சை மேற்கொள்ளப்படுகின்ற விதம் மற்றும் அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் சுகாதார அமைச்சினால் மீளளிப்பு செய்யப்படுகின்ற விதம் தொடர்பாக சுகாதார அமைச்சினதும் இணக்கத்துடன் குறித்த முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினுள் 30 பல்வேறுப்பட்ட பிரிவுகளில் காணப்பட்ட மொத்த கிரயம் ரூபா 2.042 மில்லியன் ஆன மருந்துகள், அறுவை சிகிச்சை பொருட்கள் போன்ற இருப்பு அலகுகள் 16,255, 2019 திசெம்பர் 31 இல் கணினி அமைப்பில் குறைவாக காட்டப்பட்டிருந்தமையும், மேலும், ரூபா 893,335 கிரயமுடைய இருப்பு அலகுகள் 15,733 கணினி அமைப்பில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தமையும், கணினி அமைப்பில் பெறப்பட்ட இருப்பு அறிக்கை மற்றும் 2019 திசெம்பர் 31 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக இருப்பு மீளாய்வு அறிக்கையை ஒப்பிடும் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இருப்பு தொடர்பான கணினி அமைப்பு கட்டுப்பாட்டு முறைமை சரியாக செயற்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது. | பௌதீக இருப்பு பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் இருப்பு கணினி அமைப்பிற்கு உட்செலுத்தும் போது ஏற்படுகின்ற தவறுகளினால் இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டுள்ளமை என மற்றும் இருப்பு காப்பாளர்களினால் இற்றைப்படுத்தப்பட்ட மற்றும் சரியாக பாவணை உறுப்படி இருப்பு அமைப்பிற்கு உட்செலுத்தும் வரை இவ்வாறான நடைமுறை பிரச்சனைகள் காணப்படுகினறது என. | மருந்துகள், அறுவை சிகிச்சை பொருட்கள் போன்ற இருப்பு தொடர்பான கணினி அமைப்பு கட்டுப்பாட்டு முறைமை சரியாக செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறை பயன்பாட்டுடைய சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | நோயாளர்கள் பராமரிப்பு சேவையின் முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் பெற்றுக் கொள்ளும் எதிர்ப்பார்ப்பில் ரூபா 310,000 செலவிடப்பட்டு 2018 மார்ச் 22 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த 10 Tab கணினிகள் மற்றும் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட Early Warning System இற்காக பயன்படுத்தும் எதிர்பார்ப்புடன் ரூபா 245,718 செலவிடப்பட்டு 2017 ஆகஸ்ட் 09 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த 11 Tab கணினிகள் 2020 யூன் 30 ஆம் திகதி வரையிலும் தொடர்புடைய தேவைக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நோயாளர் பாராமரிப்பு சேவையின் முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் பெற்றுக் கொள்ளும் செயற்திட்டம் முகாமைத்துவ தீர்மாணத்தின் அடிப்படையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என, Early warning system செயற்திட்டத்தின் மென்பொருளில் ஏற்பட்டுள்ள தொழிநுட்ப பிழைகளினால் இச் செயற்திட்டம் இடையில் நிறுத்தப்பட்டுள்ளது என. “covid 19 ” நோயாளர்கள் பராமரிப்பு சேவைக்காக வைத்தியசாலையினுள் செயற்படுத்தப்பட்டுள்ள தொழிநுட்ப முறைமைக்காக 06 Tab கணினிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டுள்ளது என, பணிப்பாளர் சபை அறிக்கை புதிய தொழிநுட்ப முறைமையின் பிரகாரம் செயற்படுத்துவதற்காக இது வரையில் 09 Tab கணினிகள் பணிப்பாளர்களின் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டுள்ளது என | இந்த Tab கணினி இயந்திரங்கள் முறையாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் எஞ்சிய 06 Tab கணினிகள் வருங்காலத்தில் செயற்படுத்துவதற்கு குறித்த Clinic Management System செயற்திட்டத்திற்காக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என. | |
| (ஆ) | மின்னஞ்சல் ஆவண முகாமைத்துவ கணினி மென்பொருள் அமைப்பொன்று ஸ்தாபிப்பதற்காக கணினி மென்பொருளொன்று கொள்வனவு செய்வதற்கும், தரவுகள் Scan செய்வதற்கு, சமூக ஊடகங்களுக்கு மற்றும் பணிநிலையினர் கொடுப்பனவு போன்றவற்றிற்காகவும் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் ரூபா 21.558 மில்லியன் செலவிடப்பட்டு இருப்பினும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தொடர்புடைய நோக்கங்கள் அடையப்படுவதற்காக இந்த கணினி அமைப்பு பயன்படுத்தப்படாமையினால் இது தொடர்பாக ஏற்க்கபட்ட கிரயம் வினைத்திறனற்ற செலவொன்றாக ஆகியுள்ளது. மேலும், இந்த அமைப்பு பயன்பாட்டில் நோயாளர் கட்டில் குறிப்பு மற்றும் நோயாளர்கள் பரிசோதனை அறிக்கைகள் பரிசோதனை செய்து நோய் அறிதல்களை மேற்கொள்வதற்கும், தொடர்புடைய தகவல்கள் மற்றும் தரவுகள் அமைப்பினுள் களஞ்சியப்படுத்துவதற்கும் கிளினிக் பராமரிப்பு நடவடிக்கைகள் பேணிச் செல்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டு ரூபா 2.82 மில்லியன் செலவிடப்பட்டு 2018 ஒக்தோம்பர் 03 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த 25 Laptop கணினிகள் 2020 யூன் 30 ஆம் திகதி வரையிலும் தொடர்புடைய பணிக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்தகட்டில் குறிப்புகள் ஸ்கேன் செய்யும் பணிக்காக தொடர்புடைய பெறுகை பணியில் ஏதும் முறைக்கேடுகள் ஏற்பட்டுள்ளமை என எழும் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைக்காக குற்றவியல் பிரிவு மற்றும் சனாதிபதி ஆணைக்குழு உட்பட மேலும் சில பிரிவுகளினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என, அந் நிலைமை அடிப்படையில் அப்போதிருந்த தலைவரின் கையொப்பத்துடன் இரு கடிதங்களின் ஊடாக இந்த கட்டில் குறிப்புகள் ஸ்கேன் செய்யும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என மற்றும் தொடர்புடைய பரிசோதனைகளின் பரிந்துரைகள் இன்னும் பெறப்பாடாமையினால் இந்த செயன்முறை மீண்டும் ஆரம்பித்தல் பிரச்சனைக்குரியது என, இந் நிலைமையினுள் பிரதான நோக்கத்திற்காக வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட 23 Laptop கணினிகள் வைத்தியசாலையின் ஏனைய தேவைகளுக்கு பயன்படுத்துவதற்கு முகாமைத்துவத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் செயற்பட்டுள்ளமை மற்றும் ஸ்கேன் செய்யப்பட்ட நோயாளர்களின் கட்டில் கறிப்பு தகவல்கள் தரவு களஞ்சியசாலையில் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய வகையில் காணப்படுகின்றமையினால் அந்த தரவுகள் வினைத்திறனாக பயன்படுத்த முடிவதனால் அதற்காக செலவிடப்பட்ட பணம் வினைத்திறனற்ற செலவொன்றாக அமையாது என. | இந்த கணினி அமைப்பு ஸ்தாபிக்கப்பட்ட நோக்கங்களுக்காக அல்லது வேறு வினைத்திறனான பணிகளுக்காக பயன்படுத்தப்படுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 06 ஆம் திகதி ரூபா 14.46 மில்லியன் செலவிடப்பட்டு Orthopedic அறுவை சிகிச்சை அறைக்காக Arthroscopy set with Full HD Camera System உபகரணமொன்று கொள்வனவு செய்யப்படும் போது மதிப்பிடப்பட் கிரயத்தினை தாண்டி ரூபா 12.95 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.11.1 (இ), 4.2.2, 4.2.3, 6.3.3(அ) வழிக்காட்டல்களுக்கு அமைவாக இல்லாது பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே, அத்தியாவசிய தேவையாக அடையாளப்படுத்தப்பட்டிருந்த விபரக்குறிப்புகள் இல்லாது உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் இந்த உபகரணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்யப்படுவதற்காக தொடர்புடைய மனுதாரர் தேசியமருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த 11 அனுமதி பத்திரங்கள் விலைமனு திறக்கப்படும் திகதி ஆகும் போது காலாவதியாகியிருந்ததுடன் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணம் ரூபா 144,558 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது, இறுதி பயன்படுத்துனரினால் (End User) அவரின் தேவை, அறிவு மற்றும் சந்தை தகவல்கள் அடிப்படையில் மதிப்பீட்டு பெறுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது என. விபரக்குறிப்பு தயாரிக்கப்பட்டு டென்டர் அழைத்தலின் போது உபகரணத்தின் கிரயம் அதனை விட வேறுப்படக்கூடியது என, இந்த மாற்றம் தொழிநுட்ப ஆய்வு குழுவின் அல்லது பெறுகை குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்படவில்லை என மற்றும் மிகுதி பெறுகை நடவடிக்கைகளின் போது இது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படும் என, பெறுகை வழிக்காட்டி கோவையின் உறுப்புரையின் ஊடாக காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பினும், அது முறையாக மேற்கொள்ளப்படாமை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என, அநேக தொழிநுட்ப விபரக்குறிப்புகள் வைத்தியசாலையினால் முறையாக குறிப்பிடப்படவில்லை என, சில தொழிநுட்ப விபரக்குறிப்புகளுக்கு அமையாதிருப்பினும் அவை சிறிய விலகல்களாக கருதப்பட முடியும் என. வைத்திய நிபுணரின் பரிந்துரை சரியானது என மற்றும் குறைந்த விமைனு தெரிவு செய்யப்பட்டது என. இங்கு தொழிநுட்ப ஆய்வு குழுவிற்கு உபகரணத்தின் NMRA சான்றிதழ் தொடர்பாக மட்டும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என. தாமதக் கட்டணம் தொடர்பாக அந் நிறுவனம் மேற்கொண்ட கோரிக்கை அப்போதிருந்த வைத்தியசாலையின் நிர்வாகம் கருத்திற் கொள்ளப்பட்டு அக் கட்டணம் அறவிடப்படாமல்<br><br>கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது என. | உண்மையான கிரய மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டியதுடன் முடிந்த எல்லா நேரத்திலும் மதிப்பீட்டின் பெறுமதி மிகைக்காத விதத்தில் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அளவு ரீதியாக உண்மையான கிரயம் வேறுப்பட்டால் திருத்தப்பட்டு அங்கீகாரம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அனைத்து பெறுகைகளின் போதும் அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நிறுவனத்தின் தேவையின் பிரகாரம் விபரக்குறிப்பு தாயாரிப்பதற்கும் அத்தியாவசிய தேவையாக அடையாளப்படுத்தப்படாத விபரக்குறிப்பு அத்தியாவசிய விபரக்குறிப்பாக விலைமனு பதிவேடுகளுக்கு உட்செலுத்தாதிருக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். விலைக் காரணிக்கு முன்னர் தொழிநுட்ப விவரக்குறிப்புகளின் இணக்கத்தினை கருத்திற் கொண்டு விலைமனு ஆய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். விலைமனுவுடன் தொடர்புடைய அனுமதிப்பத்திரம் முன்வைக்கப்படாத மனுதாரர்கள் ஆய்விலிருந்து நீக்கப்படல் வேண்டும். உடன்படிக்கையின் பிரகாரம் தொடர்புடைய கட்டணம் அறவிடப்படல் வேண்டும். |

(ஆ) 2018 யூலை 06 ஆம் திகதி ரூபா 18.24 மில்லியன் செலவிடப்பட்டு இருதய அவசர சிகிச்சை பிரிவிற்காக Maquet Servo வகையின் 2 Ventilator இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 1.2, 2.3.1, 2.3.2, 2.5.1(ஈ), 2.6.1(அ), 2.7.5, 2.12, 4.2.2, 5.3.19, 5.6.2, 6.3.6, 7.7.1, 7.11 மற்றும் 8.9.1 ஆன வழிக்காட்டிகளுக்கு அமையாது இந்த பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மருந்துகள் மற்றும் வைத்திய உபகரணங்கள் பெறுகைக்கான வழிக்காட்டி கோவையின் 2.1 மற்றும் 2.2 ஆம் பந்திகளின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட மனுதாரர்கள் தொடர்புடைய உபகரணத்திற்காக தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையின் பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ் பெற்றுக் கொள்ளல் மற்றும் தேசிய பிரதிநிதியாக செயற்படுவதற்கு அதிகாரம் பெற்றுக் கொள்ளப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பெறுகை வழிக்காட்டி கோவையின் 5.6.2 வழிக்காட்டிக்கு முரணாக செயற்பட்டு மனுதாரர்களுக்கு இலாபமான விதத்தில் விவரக்குறிப்பு தயாரிக்கப்பட்டிருந்தது. அக் காரணத்தினால் குறைந்த விலைமனு மறுக்கப்பட்டு அதிக விலைமனு தெரிவுசெய்யப்பட்மையினால் சபை ஏற்க்கப்பட வேண்டிய மேலதிக கிரயம் ரூபா 12.3 மில்லியன் ஆக காணப்பட்டது. இயந்திரம் செயற்படுத்துவதற்கு தேவையான பயிற்சி தொடர்பான தொழிநுட்ப ஆய்வு கழுவின் கவனம் செலுத்தப்படாதிருந்நதுடன், இயந்திரத்திற்காக EDI Catheters பயன்படுத்துவதென்றால் பெறுகை வழிக்காட்டி கோவையின் உறுப்புரையின் பிரகாரம் அனைத்து பெறுகைகளும் மேற்கொள்வதற்கு இயலுமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பினும் ஆண்டினுள் டென்டர் அழைத்தல் பாரிய அளவில் மேற்கொள்ளப்படுவதனால் சில உறுப்புரைகளுக்கு அமையாத சந்தர்ப்பங்கள் காணப்பட முடியும். காண்பிக்கப்பட்டுள்ள தவறுகள் திருத்துதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தேசய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையினால் எதிர்ப்பு அற்ற கடிதம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த Ventilators தயாரிப்பு நிறுவனத்தின் தாய் நிறுனம் Sweden இல் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது மற்றும் தொடர்புடைய தயாரிப்பின் அங்கீகரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இவ் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள பதிவுசெய்யப்பட்ட சான்றிதழினுள் தயாரிப்பாளராக Sweden அலுவலகம் காண்பிக்கப்பட்டிருப்பினும் இலங்கையினுள் பகிர்ந்தளிப்பதற்காக இயந்திரம் கொண்டுவரப்படல் தெற்கு ஆசிய வலயத்திற்காக சிங்கப்பூரில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அலுவலகத்தினூடாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபையி தொடர்புடைய முகவரியாக காண்பிக்கப்பட்டிருப்பது தெற்கு ஆசியாவின் அலுவலகத்தின் முகவரியாகும். வைத்தியசாலையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் (NAVA Mode) தொழிநுட்ப ஆய்வு குழுவின் அனைத்து அங்கத்தவர்களினதும் இணக்கத்துடன் விவரக்குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. தொழிநுட்ப ஆய்வு குழுவின் அனஸ்தியாலஜிஸ்ட் உபகரணத்தின் End User ஆக தேவையை எழுத்துமூலமாக விளக்கப்படுத்தியுள்ளார். இந்த NAVA Mode அனைத்து அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் வழிக்காட்டிகளுக்கு அமைவாக மற்றும் மருந்துகள் மற்றும் வைத்திய உபகரணங்கள் பெறுகைக்கான வழிக்காட்டல் கோவையின் ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட மனுதாரர்கள் தொடர்புடைய வகையான உபகரணங்களுக்காக இலங்கையின் தேசிய பிரதிநிதியாக செயற்படுமென தொடர்புடைய தாய் நிறுவனத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட அதிகார பத்திரம் முன்வைக்கப்பட வேண்டுமென மனுதாரர்களிடம் கோரப்பட வேண்டும். குறித்த மற்றும் சுருக்கமான பதில்கள் முன்வைக்கக்கூடிய வகையில் விவரக்குறிப்பு தயாரிக்கப்படல் வேண்டும். மேலதிக கிரயம் மற்றும் மேம்பட்ட தொழிநுட்பத்துடனான இயந்திரமொன்று கொள்வனவு செய்வதற்கு முன்னர் அதன் உற்பத்தித்திறன் தொழிநுட்ப ஆய்வுக் குழு மற்றும் பெறுகை குழுவினால் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். இந்த பெறுகையின் காரணத்தினால் வைத்தியசாலையினால் ஏற்கப்பட வேண்டியிருந்த மேலதிக கிரயம் தொடர்பாக விளக்கப்படுத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் பணிநிலையினருக்கு தொடர்பாக பயிற்சி பெற்றுக்கொடுக்காமையின் காரணத்தினத்தினால் இயந்திரங்கள் பயன்பாடு குறைந்து காணப்படுகின்றமை

| | | | |
|---|---|---|---|
| | மேலதிகமாக கிரயமொன்று ஏற்கப்பட வேண்டியமையும் அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு ஒரு வருடத்திறகு மேற்பட்ட காலம் கடந்திருப்பினும் அவை குறைப்பயன்பாட்டுடையதாக வைக்கப்பட்டிருந்தது. | நோயாளருக்காகவும் தேவைப்படமாட்டாது மற்றும் தேவைப்பாட்டின் அடிப்படையில் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு ஏற்படும். | தொடர்பாக வைத்தியசாலை முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (இ) | 2019 மார்ச் 06 ஆம் திகதி ரூபா 17.21 மில்லியன் செலவு செய்து இருதய சிகிச்சை பிவிவுக்காக AF Ablation அமைப்பொன்று கொள்வனவு செய்யும் போது, இவ்வாறான உபகரணங்கள் வழங்கப்படலின் முன் அனுபவம் அற்ற வழங்குனரொருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இங்கு அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 7.12.4 வழிக்காட்டியின் பிரகாரம், மனுதாரர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட்டிருக்கவில்லை. இந்த உபகரணங்கள் வழங்குவதற்காக தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையின் பதிவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளல் அத்தியாவசியமாயினும், தெரிவுசெய்யப்பட்ட மனுதாரர்கள் அந்த சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டிராததுடன், மனுதாரர்களின் விற்பனையின் பின்னரான சேவை வழங்குவதற்குள்ள தொழில்நுட்ப பணிநிலையினர் தொடர்பாக மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இவ் இயந்திரத்திற்காக அத்தியாவசிய உதிரிபாகமான Foot Switch என்ற உதிரிபாகம் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக தேவையான சேவை கைப்புத்தகம் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை | இந்த உபகரணங்கள் மற்றும் அது தொடர்பான தொழிநுட்பம் இலங்கையினுள் முதல் முறையாக ஸ்தாபித்திருப்பது இந்த வைத்தியசாலையில் என்பதனால் முன் அனுபவம் தேடிப்பார்ப்பது தர்க்க ரீதியானதல்ல என. பெறுகை வழிக்காட்டியின் பிரகாரம் மனுதாரர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடாதிருப்பினும், மனுதாரர்களுடன் உடன்பட்ட விடயங்கள் எழுத்து மூலமாக மனுதாரர்களினால் அறிவிக்கப்பட்டு வைத்தியசாலையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என. டென்டர் அழைக்கும் நேரத்தில் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையில் பதிவு சான்றிதழ் பெறப்பட்டிராததனால், அதிகாரசபையினால் வெளியிடப்பட்டிருந்த No objection Letter பயன்படுத்தப்பட்டு உபகரணங்கள் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது என. மனுதாரர்களின் விற்பனையின் பின்னரான சேவை வழங்குவதற்குள்ள திறன் மற்றும் தொழிநுட்ப பணிநிலையினர் தொடர்பாக தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் கவனம் செலுத்தப்படாமை ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என. வைத்திய நிபுணரினால் foot switch உதிரிப்பாகம் அத்தியாவசியமற்றது என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என. சேவை கைப்புத்தகங்கள் பெற்றுக் கொடுத்தல் அத்தியாவசிய விடயமாயினும் உயர்தொழிநுட்ப உபகரணங்களின் தொழிநுட்பம் வேறு நிறுவனத்திற்கு பெற்றுக்கொடுக்காமையினால் சேவை கைபுத்தகங்கள் பெற்றுக்கொடுக்கப்படவில்லை என. | தர்க்க ரீதியானதல்லாத தேவைப்பாடு விலைமனு அழைப்பில் குறிப்பிப்படக் கூடாததுடன் விலைமனு அழைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்று பரீட்சித்தல் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவின் பொறுப்பாக கருதப்பட்டு செயற்படல் வேண்டும். பெறுகை வழிக்காட்டி கோவையின் வழிக்காட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். முக்கியமான உடன்பாடுகள் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றிற்கு உடன்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். தொழிநுட்ப விவரக்குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தியாவசிய விடயங்கள் மனுதாரர்கள் வழங்குவதை குறித்து உறுதிசெய்வது தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் மற்றும் பெறுகை குழுவின் பொறுப்பாவதுடன் வழங்கப்படுகின்ற இயந்திரம் தொழிநுட்ப விவரக்குறிப்புகளுக்கு அமைவானதா என்று பரீட்சித்து உறுதி செய்யப்படல் வேண்டும். தொழலில்நுட்ப விவரக்குறிப்புகளின் பிரகாரம் தொடர்புடைய பயிற்சி பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இந்த உபகரணங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்படடிருக்காததுடன், வழங்கல் நிபந்தனைகள் பிரகாரம் தொடர்புடைய வைத்தியநிபுணருக்கு பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை. இந்த இயந்திரம் ஒரு வருடத்திடத்திற்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிராததுடன், வழங்கல் தாமதமாகியதற்கான காரணத்தினால் அறவிடப்பட வேண்டிய ரூபா 516,405 ஆன பணம் வழங்குனரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த ஆண்டில் பயிற்சி திட்மிடப்பட்டிருப்பினும், Covid – 19 பிரச்சனையினால் வரும் காலப்பகுதியில் அப் பயிற்சி பெற்றுக் கொடுப்பதற்கு நிறுவனம் உடன்பட்டுள்ளது என. உபகரணத்தின் உதிரிபாகங்கள் அனைத்தும் பெறப்படவில்லை மற்றும் 2020.07.27 வரையில் அறுவை சிகிச்சை பணிநிலையினருக்காக தொடர்புடைய பயிற்சிகள் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. NMRA இடமிருந்து No objection Letter பெறப்படுவதற்கு ஏற்பட்ட தாமதத்தினால் ஒரு மாத காலம் வைத்தியசாலையினால் நீடிக்கப்பட்டுள்ளமையினால் தாமதக் கட்டணம் அறவிடப்படவில்லை. | முழுமையாக பெறப்படாதிருக்கையில் மற்றும் அறுவைசிகிச்சை பணிநிலையினருக்காக தொடர்புடைய பயிற்சி பெற்றுக் கொடுக்காதிருக்கையில் இயந்திரத்தின் மொத்த பணம் செலுத்தல் தொடர்பாக கொடுப்பனவு பரிந்துரை செய்த மற்றும் அனுமதித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காறு நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இருதய அவசர சிகிச்சை பிரிவுக்கு 8 ICU படுக்கைகள், ஒன்று ரூபா 171,200 வீதம் மொத்த பெறுமதி ரூபா 1.37 மில்லியனுக்கு கொள்வனவு செய்யும் கட்டளை (ஆடர்) 2017 செப்தெம்பர் 7 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது. கட்டளை வெளியிடப்பட்டு 6 மற்றும் 8 வாரங்களுக்குள் வழங்கல் மேற்கொள்ள வேண்டியிருப்பினும் வழங்குனர் வழங்குவதற்கு தவறியிருந்தார். அவ்வாறாயினும், அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 5.4.10 மற்றும் 8.9.1 உறுப்புரைகளின் பிரகாரம் செயலாற்றுகை உத்தரவாதம் பெற்றுக்கொள்ளப்படாமை மற்றும் ஒப்பந்தத்திற்கு உடன்பட்டிராமையினால் வழங்குநருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு முடியயதிருந்தது. அடுத்த குறைந்த மனுதாரரின் தொடர்புடைய வழங்கல் நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் பின்னர் வேறு வழங்குநரொருவர் தெரிவு செய்வதற்காக ரூபா 2.54 மில்லியன் மேலதிக கிரயமொன்று ஏற்பதற்கு நேர்ந்தது. | வழங்குனரினால் செயலாற்றுகை உத்தரவாதம் பெற்றுக் கொடுக்கப்படாமை, ஒப்பந்தம் கைத்தாச்சிடப்படாமை மற்றும் குறித்த நேரத்திற்கு வழங்கல் மேற்கொள்ளப்படாமை காரணங்களினால் அரச பெறுகை கோவையின் 8.11.6 பிரகாரம் வழங்குநர் “ Defult ” வழங்குநராக பெயரிடப்பட்டு இரண்டு வருட காலம் உபகரணங்கள் வழங்கல் டென்டர்களுக்கு பங்கேற்றல் நிறுத்துவதற்கு வைத்தியசாலை நடவடிக்கை எடுத்திருந்தது, 8 மனுதாரர்கள் முன்வைக்கப்பட்டிருந்த விலைமனுக்களில் முதற் மதிப்பீட்டின் போது குறைந்த விலைமனு முன்வைத்திருந்த மனுதாரர்கள் மூன்று நபர்கள் தொழிநுட்ப மதிப்பீட்டின் போது விவரக்குறிப்பு பூர்த்தி செய்யப்பட்டிராமையினால் முதற் மதிப்பீட்டின் போது நீக்கப்பட்டது என. இந்த டென்டர் திறந்ததன் பின்னர் ஒரு வருடத்திற்கு பின்னர் இரத்து செய்ய வேண்டியிருப்பதனால் புதிய பெறுகையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். விலைமனு நிபந்தனைகள் மற்றும் தொடர்புடைய ஒழுங்குமுறைகளின் பிரகாரம் செயற்படாத மனுதாரர்கள் தொடர்பாக அரச பெறுகைவழிக்காட்டி கோவையின் 8.11.4 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2019 யூலை 23 ஆம் திகதி ரூபா 9.18 மில்லியன் செலவிடப்பட்டு இருதய தொராசி அறுவை சிகிச்சை அறைக்காக Operating Theatre Table ஒன்று கொள்வனவு செய்யப்படும் போது மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 4 மில்லியனை விஞ்சி ரூபா 5.18 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே, ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சாதாரண காரணத்தினை தவிர்த்து கூடிய விலைமனு முன்வைக்கப்பட்டிருந்த மனுதாரர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டமையினால் ரூபா 2.31 மில்லியன் மேதலிக கிரயம் ஏற்க வேண்டியிருந்தது. | 2018 ஆம் ஆண்டில் பெறுகை திட்டத்தினுள் (Procurement Plan) இதற்கான மதிப்பீடு ரூபா 4 மில்லியன் ஆயினும், நிராகரிக்கப்பட்ட மனுதாரர்களில் ஒருவரை தவிர 6 நபர்களின் விலை அதை விட அதிகமானது, பெறுகை குழு முதற் கவனம் செலுத்தப்பட்டிருப்பது தொழிநுட்ப குழுவின் பரிந்துரைக்கானதுடன் மதிப்பீட்டு பெறுமதி தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படவில்லை என, இறுதி பாவனையாளரின் பரிந்துரை கருத்திற் கொள்ளப்படாது குறைந்த விலைமனு மட்டும் கருத்திற் கொள்ளப்பட்டு தேவைக்கு பொருந்தாத கொள்வனவின் அடிப்படையில் அதனை விட நட்டமொன்று ஏற்படக்கூடும் என மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழு அதிக கவனம் செலுத்தியுள்ளது இறுதி பாவனையாளரின் பரிந்துரைக்கு ஆகும் என. | மதிப்பிடப்பட்ட செலவினுள் பெறுகை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், மதிப்பீட்டினை விஞ்சுவதென்றால் அது திருத்தப்பட்டு அதற்கான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். அரசின் பெறுகை வழிக்காட்டி கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் விவரக்குறிப்பு மற்றும் ஏனைய தேவைப்பாடுகளுக்காக சாராம்சமாக பதிலளிக்கக்கூடிய மிகக் குறைந்த விலைமனுவை தெரிவு செய்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய சாதாரண காரணமில்லாது கூடிய விலைக்கு கொள்வனவு செய்ததினால் ரூபா 2.31 மில்லியன் மேலதிக கிரயமொன்று ஏற்க நேரிட்டதனை குறித்து முறையான பரிசோதனையொன்று நடத்தப்படல் வேண்டும். |
| (ஊ) | வாகனத் தரிப்பிடத்தின் கேட் அகலப்படுத்திய ஒப்பந்தக்காரருக்கு 2019 யூன் 07 ஆம் திகதி ரூபா 2.22 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அரச பெறுகை வழிக்காட்டியின் 2.14.1 பிரகாரம் ரூபா 10 மில்லியன் வரையான வேலைகளுக்காக சந்தைவிலை குறிப்பு முறையின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைகள் 5 இற்கு குறையாத எண்ணிக்கை அழைக்கப்பட வேண்டியிருப்பினும், 3 ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மட்டும் விலைகள் அழைக்கப்பட்டிருந்தன. மேலும், முன்னர் அறிவிக்கப்பட்ட திகதியில் விலைமனுக்களை பெற்றுக் கொள்ளல், மூடுதல் மற்றும் விலைமனுக்கள் பகிரங்கமாக திறத்தல் போன்றன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வைத்தியசாலை முகாமைத்துவ சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டிலிருந்து வைத்தியசாலை பணிப்பாளரின் ஆலோசனையின் பிரகாரம் பெறுகை மேற்கொள்ளப்பட்டுள்ளது, மிகவும் அவசர பணியாக கருத்திற் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட விலை அழைக்கப்பட்டுள்ளது மற்றும் அது பெறுகை வழிக்காட்டி கோவையின் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சந்தை விலை குறிப்பு முறையின் கீழ் விலைகள் அழைக்கும் போது அரச பெறுகை வழிக்காட்டி கோவையுடன் சேர்த்து பெறுகை கைப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பெறுகை வழிக்காட்டிகளுக்கு முரணாக செயற்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| அழுக்கு ஆடைகள் கழுவும் ஒப்பந்தம் (Laundry Service) 2019 ஏப்ரல் 01 ஆம் திகதி தொடக்கம் ஒரு ஆண்டு காலத்திற்காக மாதாந்த கிரயம் ரூபா 1.4 மில்லியன் இற்கு ஒப்பந்தக்காரரொருவருக்கு அளிக்கப்பட்டிருந்தது. ஏல உடன்படிக்கையின் பிரகாரம், ஒப்பந்தக்காரர்கள் பயன்படுத்துகின்ற இரசாயண பொருட்கள் குறித்த தரத்திற்கு அமைவானது என இலங்கை கட்டளைகள் நிறுவனத்திலிருந்து, தொழில்துறை தொழிநுட்ப நிறுவனத்திடமிருந்து, ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைகழகமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தர சான்றிதழ் ஒப்பந்தகாரரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், ஒப்பந்தக்காரர் பயன்படுத்தும் இரசாயண பொருட்கள் வைத்தியசாலையின் லொன்றி மேற்பார்வையாளரினால் பரீட்சித்துப் பார்த்து அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, ஒப்பந்தக்காரரினால் சேவையில் ஈடுப்படுத்தப்படும் பணிநிலையினரின் வருகை வைத்தியசாலையில் காணப்படும் கைரேகை இயந்திரங்களில் பதிவு செய்யப்படுவதற்கு மற்றும் அனைத்து ஊழியர்களும் இணைத்துக் கொள்வதற்கு முன்னர் ஹெபடயிட்ஸ் பீ நோய்க்காக தடுப்பூசிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டமை எழுத்து மூலமாக உறுதி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகினறது என. ஒப்பந்தக்காரர் பயன்படுத்துகின்ற ஆடை சலவைத்தூள் அடங்கிய இரசாயண பொருட்கள் தொடர்பாக General chemical Industries நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம் அப் பொருட்கள் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் தரத்திற்கு தொடர்புடையது என, இரசாயண பொருட்கள் பரீட்சிப்பதற்கு லொன்றி மேற்பார்வையாளருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது என, ஹெபடைடிஸ் நோய்க்காக தடுப்புசிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டமைக்கு சான்றிதழ் அவர்களிடம் காணப்படுகின்றது மற்றும் தடுப்பூசி பெற்றுக் கொடுத்தல் அல்லது பெற்றுக்கொடுக்காமை அந் நிறுவனத்திற்கான பொறுப்பாகும் என. | விலைமனு ஒப்பந்தத்தின் பிரகாரம், குறித்த தரத்தினையுடைய பொருட்கள் ஒப்பந்தக்காரர்கள் பயன்படுத்துகின்றமை ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் ஊடாக உறுதி செய்யப்படல் வேண்டும். விலைமனு நிபந்தனையின் பிரகாரம் ஒப்பந்தக்காரர்கள் செயற்படுகின்றமையை உறுதி செய்யும் பொறுப்பு லொன்றி மேற்பார்வையாளருக்கு பணிக்கப்படல் வேண்டும். லொன்றியில் சேவை செய்கின்ற அனைத்து ஊழியர்களுக்காகவும் இந்த தடுப்பூசி பெற்றுக்கொடுக்கப்பட்டுள் ளமைக்கு எழுத்து மூலமாக உறுதி செய்யப்படல் வைத்தியசாலையின் பொறுப்பாக கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாத பதவிகளுக்காக நியமனங்கள் செய்யப்பட மற்றும் அங்கீகரிக்கப்படாத சம்பளம் கொடுப்பனவு செய்வதற்கு அதிகாரம் பெற்றுக் கொடுப்பதற்காக பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் இல்லாதெனினும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிராத ‘‘மனித வள பிரதானி’’ பதவியின் கடமைகள் மேற்கொள்ளப்படுவதற்கு மனித வள முகாமையாளர் (செயற்பாட்டு) பதவி ஏற்றிருந்த உத்தியோகத்தரை நியமிப்பதற்கும் கடமை நிறைவேற்றல் பதவியின் ஆரம்ப சம்பளத்தில் ¼ | இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வெளி விசாரணையின் அறிக்கையின் பிரகாரம், உத்தியோகத்தரின் பணிக்கொடை இடைநிறுத்தப்பட்டுள்ளது என. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாத பதிவிகளுக்காக நியமனங்கள் மேற்கொள்ளப்பட கூடாததுடன், அப் பதவிகளுக்காக சம்பளம் செலுத்தப்பட கூடாது. முறையான பதவி அங்கீகாரம் பெறப்பட்ட நியமனத்தின் போதும் கொடுப்பனவு தாபன விதிக்கோவையின் |

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு செய்வதற்கும் பணிப்பாளர் சபையினால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. தாபனக் கோவையின் VII ஆம் அதிகாரத்தின் 12.3 ஆம் உறுப்புரையின் பிரகாரம் முறையாக மேற்கொள்ளப்படுகின்ற கடமை நிறைவேற்றல் நியமிப்பின் போதிலும், கடமை நிறைவேற்றப்படும் பதவியின் ஆரம்ப சம்பளத்தில் ¼ ஆன கொடுப்பனவில் 2/3 மட்டும் கொடுப்பனவு செய்யமுடியுமாயிருப்பினும், கடமை நிறைவேற்றப்படும் பதவியின் ஆரம்ப சம்பளத்தில் ¼ இற்கு சமனான முழு கொடுப்பனவு மற்றும் போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகளும் இந்த உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அவ்வண்ணமாக 20 மாத காலத்திற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த மொத்த கொடுப்பனவு ரூபா 1.82 மில்லியன் ஆகும். | | ஏற்பாடுகளுக்கமைய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியதனால் மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் மீண்டும் அறவிடப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2010 திசெம்பர் 14 ஆம் திகதிய 55 ஆம் இலக்க அரச வியாபார சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய, குறைந்தப்பட்சம் 3 மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு குழு கூட்டம் நடத்தப்பட வேண்டியதுடன், 2018 செப்தெம்பர் 26 ஆம் திகதியிலிருந்து 2020 ஆகஸ்ட் வரையான காலப்பகுதிக்குள் கணக்காய்வு குழு கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கவில்லை. | 2018 செப்தெம்பர் 26 ஆம் திகதி கண்காய்வு குழு கூட்டம் நடத்தப்பட்டதன் பின்னர் நாட்டில் காணப்பட்ட அரசியல் சூழலின் அடிப்படையில் பணிப்பாளர் சபை வேறுப்படல் மற்றும் Covid–19 வைரஸ் காரணத்தினால் கணக்காய்வு குழு கூட்டம் நடத்தப்படவில்லை மற்றும் தற்போது கணக்காய்வு குழு கூட்டம் நடத்தப்படுவதற்கு அனைத்து விடயங்களும் ஆயத்தப்படுத்தப்பட்டிருப்பினும், கணக்காய்வு குழுவின் தலைவராக திறைச்சேரியின் பிரதிநிதி பணிப்பாளர் சபையிலிருந்து விலகியதன் காரணத்தினால் மீண்டும் கணக்காய்வு குழு கூட்டம் நடத்துவதற்கு முடியாத நிலை காணப்படுகின்றது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு குழு கூட்டம் நடத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |